சுருக்கம்

பணியமைப்பு - வேளாண்மை-உழவர் நலன் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி.ஆ.ஆர்த்தி என்பவரின் பணியினை 21.11.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் (வேநி9) துறை**

திருவள்ளுவர் ஆண்டு 2055, குரோதி, ஆனி மாதம் 5-ம் நாள்

**அரசாணை (3டி) எண்.71** நாள்:19.06.2024

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை, நாள் 08.03.2023.
2. வேளாண்மை ஆணையர் கடித எண் அநிபி8 / 97467 / 2019, நாள் 05.07.2023.

*****

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வந்த போது 06.05.2014 முதல் மருத்துவ இயலாமை ஓய்வில் சென்ற திருமதி.எஸ்.சிவகாமி அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு / மகள் திருமதி.ஆ.ஆர்த்தி என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து, ஆணையிடப்பட்ட வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.அநிபி6 / 97467 / 2019, நாள் 11.11.2022-இன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) பணி நியமனம் செய்து, சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக (பிணையமற்றது) 21.11.2022 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளதோடு, தனியரின் பணியினை 21.11.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை ஆணையர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

(தபிபா)

2. வேளாண்மை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி.ஆ.ஆர்த்தி என்பவரின் பணியினை 21.11.2022 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியானது, வரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர்,
சேப்பாக்கம், சென்னை-5(இ).
திருமதி.ஆ.ஆர்த்தி, இளநிலை உதவியாளர், (பிணையமற்றது)
வழி: வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்,
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர்,
முதன்மை கணக்காய்வுத் தலைவர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத்துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண்.5416758 / வேநி9 / 2023
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

19/8/23
பிரிவு அலுவலர்